பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2052 தை 28 செவ்வாய்க்கிழமை 09.02.2021 கதிர் 327

## தொற்றாளர் 70,806 குணமடைவு 65,053

இலங்கையில் மேலும் 571 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது. இதன்படி மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 70 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாவிலிருந்து 65 ஆயிரத்து 53 பேர் குணமடைந்துள்ளனர். 4 ஆயிரத்து 817 பேருக்குத்

2

# பேரணியில் பங்கேற்ற அரசியல் புள்ளிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல்

### பருத்தித்துறையில் பொலிஸார் முயற்சி

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நீதி கோரி முன்னெடுக்கப்பட்ட மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்துகொண்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் கீழ் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் 3 பொலிஸ் நிலையங்களால் 'பி' அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே பேரணிக்குத் தடை கோரி 'ஏ' அறிக்கையூடாக பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையங்களால்

2

## பெப்ரவரி 14 – காதலர் தின களியாட்டங்களுக்குத் தடை

சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளை மீறி காதலர் தினக் களியாட்டங்களை முன்னெடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

2

# சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட எஸ்.டி.எவ். நீக்கப்படுவதற்கு நானேதான் காரணம்!

### பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர இறுமாப்பு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப்படைப் பாதுகாப்பை நானே நீக்கினேன்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

2



## இம்ரான் கான் வருகை:

## பாகிஸ்தான் தூதுவருடன் ரிஷாத் குழு அவசர சந்திப்பு



இலங்கை வரவுள்ள பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், சமகால அரசியலில் சிறுபான்மையினர் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து, அரசின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2

## போர்க்குற்றங்கள் நடைபெறவில்லை

### வடக்கு மக்களின் வாக்கே சாட்சி; அமைச்சர் தினேஷ் புதுக்கதை



இலங்கையில் 2010இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலின்போது இறுதிப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதிக்கு வடக்கில் பெரும்பாலான மக்கள் வாக்களித்தனர். படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்பதற்கு

2

## ஐ.நாவுக்கு அடிபணிய இலங்கை தயாரில்லை

### அமைச்சர் கெஹலிய சண்டித்தனம்

இலங்கை அரசு ஐ.நா. சபையினர் மற்றும் புலம்பெயர் தமிழர்களுக்கு அடிபணிந்து அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யத் தயாராக இல்லை.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

2



## மேல் மாகாணத்தின் 412 பாடசாலைகள் 15 இல் மீளத் திறப்பு

மேல் மாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் முதலாம் தவணைக் கற்றல் நடவடிக்கைகளை எதிர்வரும் 15 ஆம் திகதிக்குப் பின்னர் முழுமையாக ஆரம்பிக்க முடியும் எனப் பிரதேச தொடர்பு குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின்

2

## கோட்டாபயவை ஜனாதிபதியாக்க உழைத்தமை தவறெனில் மன்னிப்புக் கேட்பதற்கு நான் தயார்

### 'மொட்டு'க் கட்சிக்கு விமல் பதிலடி



2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்பட்ட பின்னர் நுகேகொடாவில் தொடங்கிய 'மஹிந்த அலை' அரசியல் பயணத்தின் முன்னோடிகளில் ஒருவராக நான் இருந்தமையால், அதற்காக மக்களிடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன். கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்க வேண்டும், அதை நன வாக்குவதற்கு

2

## 'மொட்டு' அரசிலிருந்து விமலை உடனே வெளியேற்ற வேண்டும்!

### இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா வலியுறுத்து



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரான அமைச்சர் விமல் வீரவன்ஸவை ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும்.

- இவ்வாறு ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினரும் இராஜாங்க அமைச்சருமான நிமல் லான்சா வலியுறுத்தியுள்ளார்.

2




## வவுனியாவில் 7 வயது சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்பு

### பொலிஸார் தீவிர விசாரணை

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நவ்வி பகுதியில் 7 வயது பாடசாலை மாணவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் வீட்டில் இருந்து சக மாணவனின் வீட்டுக்குச் சென்று படித்துவிட்டு வருவதாகத் தெரிவித்துச்

2

## போர்க்குற்றங்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இதுவே சிறந்த சான்றாகும்.

- இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக ஜெனிவாவில் இம்முறை கடுமையான தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச அமைப்புகள் வெளியிட்டுவரும் அறிக்கைகள் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் இன்றளவிலும் தடை செய்யப்பட்ட அமைப்பாக இருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்புக்காக ஜெனிவா சென்று பொய்யுரைப்பவர்களும் இருக்கவே செய்கின்றனர். இலங்கையின் இறைமை மற்றும் சுயாதீனத்தில் சர்வதேசம் தலையிட வேண்டும் என்பதே அவர்களின் வலியுறுத்தலாக இருக்கின்றது. இதற்கு உடன்பட முடியாது என நாம் திட்டவட்டமாக அறிவித்துவிட்டோம்.

போரில் நாம் வெற்றி பெறும்போது இராணுவத் தளபதியாக சரத் பொன்சேகாவே செயற்பட்டார். அவர் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டபோது தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் வெற்றிபெற வைப்பதற்காக வடக்கில் வாக்குக் கேட்டனர். இதன்படி வடக்கில் மட்டும் எம்மைத் தோற்கடித்து அங்கு சரத் பொன்சேகாவே வெற்றி பெற்றார்.

படையினர் போர்க்குற்றம் இழைக்கவில்லை என்ற சான்றே அதன்மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## ஐ.நாவுக்கு அடிபணிய ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் குற்றச்சாட்டுக்களை அரசு முழுமையாக மறுக்கின்றது. அதுபோன்ற சம்பவங்கள் இலங்கையில் நடைபெறவில்லை என்பதை பிரிட்டன் உள்துறை அமைச்சின் அறிக்கை உறுதிப்படுத்துகின்றது.

புலம்பெயர் தமிழர்களால் முன்வைக்கப்படும் பக்கச்சார்பான குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

இலங்கையின் 30 வருட காலப் போரை நிறைவுக்குக் கொண்டுவந்த மனிதாபிமான நடவடிக்கையில் ஏதேனும் சட்டவிரோதச் செயற்பாடுகள் நடைபெற்றுள்ளதா என்பதை அரசு உள்ளக விசாரணையொன்றின் மூலம் கண்டறியவுள்ளது.

உள்ளக விசாரணைகளின்போது, ஏதாவது அநீதி இடம்பெற்றுள்ளது எனத் தெரியவந்தால், அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் அரசு தயங்காது - என்றார்.

## கோட்டாபயவை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உழைக்க வேண்டும் என்று சொல்வது தவறு என்றால் தேசத்திடம் மன்னிப்புக் கேட்கத் தயாராக இருக்கின்றேன்.

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவர் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷ நீக்கப்பட்டு, அந்தப் பதவிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என விமல் வீரவன்ஸ, கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு தெரிவித்தமை தொடர்பில் அவர் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் நேற்று கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பதிலளிக்கும் வகையில் நீர் கொழும்பில் இன்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட பின் ஊடகவியலாளர்களிடம் அமைச்சர் விமல் வீரவன்ஸ மேற்படிக் கருத்தை வெளியிட்டார்.

## 'மொட்டு' அரசிலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைத்துவம் தொடர்பில் கருத்து வெளியிடுவதற்கு விமல் வீரவன்ஸவுக்கு எவ்வித அருகதையும் கிடையாது. அவர் அவரின் கட்சி விவகாரத்தைப் பார்த்துக் கொள்ளட்டும். எமது பிரச்சினைகளை நாம் பார்க்கின்றோம்.

அரசில் இருந்தால் கூட்டுப் பொறுப்பு இருக்க வேண்டும். அதைவிடுத்து வீண் பிரசாரங்களைச் செய்வதை ஏற்க முடியாது. அவ்வாறு செய்வதாக இருந்தால் அரசில் இருந்து வெளியேறி, எதிரணியில் அமர்ந்து அவர் அதனை செய்யட்டும். விமல் வீரவன்ஸ என்ற நபரை அரசிலிருந்து உடனடியாக வெளியேற்ற வேண்டும் - என்றார்.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைமைப் பதவியிலிருந்து மஹிந்த ராஜபக்ஷவை நீக்கிவிட்டு, அப்பதவி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட வேண்டும் என விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பிவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## வவுனியாவில் 7 வயது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றுள்ளார். எனினும், நீண்ட நேரமாகியும் அவர் வீடு திரும்பவில்லை.

இதையடுத்து அவரைக் காணவில்லை என ஓமந்தைப் பொலிஸ் நிலையத்தில் இன்று காலை முறைப்பாடு அளிக்கப்பட்டிருந்தது.

குறித்த சிறுவனின் புத்தகப் பை அவரின் சக மாணவனின் வீட்டுக்கு அருகில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

இந்தநிலையில், ஓமந்தைப் பொலிஸார் மோப்ப நாய் சகிதம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த சிறுவன் அவ்வீட்டில் காணப்பட்ட கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனியா நவ்வி ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று வரும் 07 வயதுடைய ப.அபிசாந் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான தீவிர விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சுமந்திரனுக்கு வழங்கப் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரைக்குமான தமிழ்பேசும் சமூகத்தின் நீதிக்கான பேரணி பல்வேறு தடைகளைத் தாண்டி நேற்றுமுன்தினம் மாலை பொலிகண்டியில் வெற்றியுடன் நிறைவடைந்தது.

இந்தப் பேரணியின் ஆரம்பத்தில் இருந்து நிறைவு வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன் த.கலையரசன் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகள் பலர் முன்னின்று செயற்பட்டனர். இவர்களில் சுமந்திரனின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அதிரடிப் படை நேற்றுமுன்தினம் இரவு திடீரென மீளப்பெறப்பட்டிருந்தது.

இந்தநிலையில், 'ஹிரு' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர, சுமந்திரனுக்கு வழங்கப்பட்ட எஸ்.டி.எவ். பாதுகாப்பை தானே நீக்கினார் எனவும், எதற்காக நீக்கப்பட்டது என்ற காரணத்தையும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டிருந்த பின்னணியிலேயே அவருக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனால், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான கவனயீர்ப்புப் பேரணியில் கலந்துகொண்டிருந்த நிலையில் அவருக்கு விசேட அதிரடிப் படை பாதுகாப்பு அவசியமற்றுப் போய்விட்டது. பெரியளவிலான பொது நிகழ்வில் எவ்வித உயிர் அச்சுறுத்தலுமின்றி அவரால் பங்கேற்க முடியுமாயின், அதன் பின்னர் இவ்வாறான விசேட பாதுகாப்பு அவசியமற்றது. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பொலிஸ் பாதுகாப்பு அவருக்குத் தொடரும் - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

2014 ஆம் ஆண்டிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் படுகொலை செய்ய மூன்று தடவைகள் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சிங்கள பாதாள உலகக் கோஷ்டியினர் உள்ளிட்ட 30 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் தற்போதும் 6 இற்கும் அதிகமான வழக்குகள் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன. அத்துடன் சந்தேகநபர்கள் பலர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் இருக்கின்றது என்ற விடயம் 2014ஆம் ஆண்டு அன்றைய நாடாளுமன்ற சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. அவரின் வேண்டுகோளுக்கிணங்கவே சுமந்திரனுக்கு விசேட அதிரடிப் படையின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பேரணியில் பங்கேற்ற ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடரப்பட்ட வழக்குக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் வழங்கிய தடை உத்தரவு மீறப்பட்டுள்ளது எனத் தெரிவித்தே, இந்தப் 'பி' அறிக்கைகள் பேரணியில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நீதிமன்றக் கட்டளைச் சட்டம் 55 (1), 56 (2) (ஆ) ஆகிய பிரிவுகளின் கீழ் இந்தப் 'பி' அறிக்கைகளை பருத்தித்துறை, நெல்லியடி மற்றும் வல்வெட்டித்துறை பொலிஸார் தனித்தனியே தாக்கல் செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கட்சிகளின் முக்கியஸ்தர்கள் உட்பட்ட அரசியல் பிரதிநிதிகளுக்கு எதிராகவே நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு இன்று திறந்த மன்றில் அழைக்கப்பட்டு மார்ச் 29, மே 19 மற்றும் மே 20ஆம் திகதிகளுக்குத் தவணையிடப்பட்டுள்ளன.

இதேபோன்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்திலும் நேற்றுப் பொலிஸார் 'பி' அறிக்கைகளைத் தாக்கல் செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொற்றாளர் 70,806 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 365 பேர் உயிரிழந்துள்ளனர்.

## பெப்ரவரி 14 - காதலர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவ்வாறான களியாட்டங்களை முன்னெடுப்பவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களினூடாகப் பல்வேறு களியாட்ட நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

விருந்துபசார நிகழ்வுகள், திருமண நிகழ்வுகளிலேயே கடந்த நாள்களில் அதிக கொரோனா நோயாளர்கள் பதிவாகியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பாகிஸ்தான் தூதுவருடன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பிலுள்ள பாகிஸ்தான் பிரதி உயர்ஸ்தானிகர் தன்வீர் அஹமட் பெட்டை இன்று சந்தித்த இந்தக் குழுவினர், நாட்டில் சிறுபான்மைச் சமூகங்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகள், முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவது உட்பட முஸ்லிம்கள் அண்மைக்காலமாக எதிர்கொள்ளும் நெருக்குவாரங்கள் குறித்தும் தூதுவரிடம் எடுத்துக் கூறினர்.

இது பற்றி கட்சியின் தவிசாளர் அமீர் அலி தெரிவித்ததாவது:-

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சுகாதார வழிகாட்டலுக்கு இணங்க, உலகத்தின் 190 நாடுகள் கொரோனாத் தொற்றால் மரணிப்பவர்களுடைய சடலங்களை அடக்கம் செய்கின்றன. மாறாக, இலங்கையில் மாத்திரம் கடும்போக்கு கொள்கையுடன், இந்த அரசு தொடர்ச்சியாக, எமது ஜனாஸாக்களைப் பலவந்தமாக எரித்து வருகின்றது.

இது தொடர்பில், எமக்கு நியாயம் பெற்றுத்தர பாகிஸ்தான் பிரதமரது விஜயம் உதவ வேண்டும். அத்துடன், இலங்கையிலும் ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான வழிவகைகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை, அவர் வலியுறுத்த வேண்டும் என்பதுவும் எமது எதிர்பார்ப்பாகும். - என்றார்.

இலங்கைக்குப் பாகிஸ்தான் செய்து வருகின்ற நல்ல பல உதவிகளுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் குழுவினர் நன்றியைத் தெரிவித்தனர்.

மேலும், இலங்கை வரும் பாகிஸ்தான் பிரதமருடன், தாங்கள் சந்தித்துப் பேசி, தமது கருத்துக்களைத் தெரியப்படுத்த, ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருப்பதாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் குழுவினர் இதன்போது தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீனுடன் தவிசாளர் அமீர் அலி, செயலாளர் எஸ்.சுபைர்தீன், பொருளாளர் ஹூசைன் பைலா ஆகியோர் உடனிருந்தனர்.

## மேல் மாகாணத்தின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனுமதியைக் கோரியுள்ளோம். மேல் மாகாணத்தில் உள்ள 492 பாடசாலைகளில் 412 பாடசாலைகளை எதிர்வரும் 15ஆம் திகதிக்குப் பின்னர் திறக்க முடியும் எனவும், ஏனைய 80 பாடசாலைகளை மார்ச் மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் திறக்க முடியும் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது எனக் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# பிளவு பெருக்குமா?

ஆளும் கூட்டுக்குள் எதிர்பார்க்கப்பட்ட குழப்பம் தொடங்கி விட்டது என்பதையே, ஆளும் தரப்பின் 'பயர் பிரான்ட்' அரசியல் வாதி விமல் வீரவன்ஸவின் குயுக்தித்தனமான அறிவிப்பும், அதன் பிரதிபலிப்பாக எழும்பிய எதிர்ப்பும் காட்டுகின்றன.

மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்கள் என்ற வலுவான நிலையில் ஆட்சிப் பீடம் ஏறிய பொதுஜன பெரமுனவின் தலைமைப் பதவியில் இருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியேற வேண்டும் என்றும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் அது ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு விமல் வீரவன்ஸ தெரிவித்த கருத்து பகிரங்க விவாதப் பொருளாகியிருக்கின்றது.

"சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி விமல் வீரவன்ஸவினுடையது அல்ல. பொதுஜன பெரமுன தொடர்பில் அறிக்கை வெளியிடும் அதிகாரமும் அவருக்குக் கிடையாது. அந்த பொதுஜன பெரமுனவின் அரசில் அங்கம் வகித்து, அமைச்சரவையிலும் இடம்பெற்றிருக்கும் பங்காளிக் கட்சியின் தலைவர், பிரதான கட்சி தொடர்பில் இப்படிப் பகிரங்கக் கருத்து எதையும் தெரிவிப்பது முறையற்றது. தவறு. அதை ஏற்க முடியாது. அப்படிக் கருத்து வெளியிட்டமைக்காக அமைச்சர் வீரவன்ஸ பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொதுஜன பெரமுன வலியுறுத்துகின்றது." – இவ்வாறு பொதுஜன பெரமுன சார்பில் அதன் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்திருக்கின்றார்.

2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி, நல்லாட்சி அரசு உருவாக்கப்பட்ட போது, சுதந்திரக் கட்சியின் தலைமையையும் மஹிந்த ராஜபக்ஷ இழந்தார். அதனை அவரிடமிருந்து பிடுங்கிக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவை ஓரம்கட்டி செல்லாக் காசாக்க முயன்றார். ஆனால் மஹிந்தர் சளைக்கவில்லை. சு.கவுக்குள் இருந்து கொண்டே தமது சகோதரர் பஸில் ராஜபக்ஷ மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் மூலம் பொதுஜன பெரமுனவை ஸ்தாபித்துக் கட்டியெழுப்பினார். மஹிந்த ராஜபக்ஷ என்ற பெயரைச் சுற்றியே அந்தக் கட்சி வடிவம் எடுத்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்கும் தனியுரிமை கூட முற்றும் முழுதாக அவரிடமே விடப்பட்டன. நான்காவது தடவை ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடுவதற்கு நல்லாட்சி அரசு கொண்டு வந்த அரசமைப்பின் 18 ஆவது திருத்தம் இடமளிக்காத நிலையில் வேறு ஒருவரைத் தீர்மானிக்க வேண்டியவரானார் மஹிந்தர். தமது இளைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அவரே அறிவித்தார்.

அப்போதுதான் அரசியல் கட்சி ஒன்றின் – பொதுஜன பெரமுனவின் – உறுப்பினரானார் கோட்டாபய ராஜபக்ஷ.

சுருங்கச் சொல்வதானால், 2005 பிற்பகுதியில் இருந்து 2014 இறுதி வரையிலும் சு.கவிலும் –

2016 இலிருந்து அண்மைக்காலம் வரை பொதுஜன பெரமுனவிலும் –

சகல அரசியல் செயற்பாடுகளுக்கும் பிதாமகனாக இருந்து வருபவர் மஹிந்த ராஜபக்ஷதான்.

ஆனால், இடையில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி பதவி என்ற முறையில் கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிட்டிய கட்டுமட்டில்லா அதிகாரத்தைக் கண்டு, அதில் ஒட்டி, உறவாடி பதவி சுகம் அனுபவிக்க விரும்பிய தரப்புகள் பொதுஜன பெரமுன என்ற ஆட்சித் தரப்பு வண்டியின் அச்சாணிக்கே ஆப்பு வைக்கத் தயாராகி விட்டன என்பதைத்தான் கட்சித் தலைமைப் பதவியிலிருந்து மஹிந்தரை மாற்றும் பகிரங்க அறிவிப்பு வெளிப்படுத்தி நிற்கின்றது.

இந்த விடயம் எதிர்பாராத ஒன்று அல்ல, எதிர்பார்க்கப்பட்டதே.

ஆளும் கட்சிக்குள் மட்டுமல்ல, அதிகாரத்தை முழுமையாக வசப்படுத்தி நிற்கும் ராஜபக்ஷ குடும்பத்துக்குள்ளும் தமது அறிவிப்பு மூலம் ஆப்பு வைத்திருக்கின்றார் விமல் வீரவன்ஸ.

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் விவகாரத்தை தேசிய சொத்தைப் பாதுகாக்கும் தேசப்பற்று நடவடிக்கை என்ற தோற்றத்தை முன்னிறுத்தித் தடுக்கும் முயற்சியை, பொதுஜன பெரமுன அரசுக்குள் இடம்பெற்றிருக்கும் பத்து சிறிய கட்சிகளைத் தமது தலைமையின் கீழ் ஒன்றுபடுத்திச் செயற்படுத்த விமல் வீரவன்ஸ ஆரம்பித்த போதே கூட்டுக்குள் குழப்பத்துக்கு அவர் தயாராகி விட்டார் என்றே கணிப்பிடப்பட்டது.

நிறைவேற்றதிகாரம் கோட்டாபய ராஜபக்ஷவின் கைகளில் இருக்கின்றமையால், இவ்வளவு காலமும் மைய விசையாக இயங்கிய மஹிந்த ராஜபக்ஷவைப் புறம் ஒதுக்கி விட்டு, கோட்டாபய ராஜபக்ஷவுடன் ஒட்டிக் கொள்வது தமக்கு வருவாய் தரக் கூடியது என்று கணக்கிடப்பட்டிருக்கின்றார் போலும் வீரவன்ஸ.

சரியோ, பிழையோ பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை மட்டுமே தனது மூலதனமாகக் கொண்டு அரசியல் நடத்தும் பொதுஜன பெரமுன என்ற கட்டமைப்பில் ஒரு சிறு கீறல் – சிறிய பிளவு – தென்பட்டிருக்கின்றது. அது வெடித்துப் பெரிய விரிசலாகிப் பிளந்தால்தான், இந்த நாட்டில் தொடர்ந்து அடக்கப்பட்டு வரும் சிறுபான்மையினருக்கு மீட்சி கிட்டும்.

# குடாநாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதாரச் சிக்கல் அதிகம் உள்ளன!

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.09

குடாநாட்டில் காணப்படும் தீவுகளில் சுகாதார சிக்கல்கள் அதிகமாகக் காணப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.



நாடாளுமன்றில் இன்று (செவ்வாய்க் கிழமை) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

'நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கு இதுவரையில் வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை. அவ்வாறு அனுப்புவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, பதவி நிலையுடைய வைத்தியர்களின் தேவை கடல் கடந்த தீவுகளுக்கு அவசியம். அத்தோடு அங்கு பணி யாற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தே செல்கின்றனர். அவர்களுக்கு சம்பளம் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே அவர்களுக்கு ஊக்குவிப்பை வழங்குவதற்காக கொடுப்பனவை வழங்க முடியுமா? இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# கொழும்பு மாவட்ட பாடசாலைகள் மீண்டும் 15 ஆம் திகதி ஆரம்பம்!

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் கொழும்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து பாடசாலைகளும் மீண்டும் திறக்கப்படும் என கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலுடன் கொழும்பு மாவட்டத்தில் உள்ள 412 பாடசாலைகளும் திறக்கப்படவுள்ளன.

அந்தவகையில், திம்பிரிகசாய, ஹோமாகம, கெஸ்பேவா, தெஹிவளை, மொரட்டுவ, கொலன்னாவ மற்றும் சீதாவாக்கை பகுதிகளில் உள்ள பாடசாலைகள் திறக்கப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# சினோபோர்ம், ஸ்பூட்னிக் விஷ தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்க மேலதிக விவரங்களை கோரும் இலங்கை!

சீனா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் தயாரித்துள்ள கொரோனாத் தடுப்பூசிக்கு அங்கீகாரம் வழங்க அந் நாடுகளிடம் மேலதிக விவரங்களை இலங்கை கோரியுள்ளது.

சீனாவின் சினோபோர்ம் மற்றும் ரஷ்யாவின் ஸ்பூட்னிக் விஷ ஆகிய இரண்டு தடுப்பூசிகளை மதிப்பாய்வு செய்யும் பணியை கடந்த வாரம் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில் அந்தந்த நாடுகளிடமிருந்து மேலதிக விவரங்களை தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழு கோரியுள்ளது என ஐ.டி.எச். வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத் தியர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார்.

3 லட்சம் டோஸ் சினோபோர்ம் தடுப்பூசியை வழங்க சீனா ஒப்புக் கொண்டுள்ள அதே வேளை, ரஷ்யாவும் தங்கள் தடுப்பூசியை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ள விருப்பம் தெரிவித் துள்ளது. இருப்பினும் உலக சுகாதார ஸ்தாபனத்தால் இந்த இரு நாடுகளின் கொரோனாத் தடுப்பூசிக்கும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படாது பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு!



மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்கும் திட்டங்கள் எதுவும் இல்லை என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஆணைக்குழுவின் புதிய தவிசாளராக நேற்று (திங்கட்கிழமை) கடமைகளை பொறுப்பேற்ற பின்னர் கருத்து தெரிவித்த அவர், தற்போதைய மின்சார கட்டணங்கள் ஒப்பீட்டளவில் அதிகம் என சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, எதிர்காலத்தில் மின்சார செலவைக் குறைக்க மின்சார உற்பத்தியில் மேலும் புதுப்பிக்கத்தக்க மின்சார ஆற்றலை சேர்க்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி இலக்குகளை அடையத் தேவையான உதவி வழங்கப்படும் எனவும் அவற்றின் மூலம் மின்சாரத் தேவையில் 70 சதவீதத்தைப் பெறுவதே அரசாங்கத்தின் இலக்கு என்றும் ஆணைக்குழுவின் தவிசாளர் ஜனக ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

# நெடுந்தீவு கடற்பரப்பில் கைதான தமிழக மீனவர்கள் 9 பேர் விடுதலை!

நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 9 பேரை விடுதலை செய்ய பிறப்பித்துள்ளது. ஊர்காவற்துறை நீதி வான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிவான் ஏ. ஜுட்சன் முன்னிலையில் நேற்று (திங்கட்கிழமை) வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருட சாதாரண சிறைத்தண்டனை விதித்து தமிழக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம் சுதாகரன் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை, இந்தியாவிற்கு அனுப்பி வைப்பதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளரிடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இலங்கை கடல் எல்லைக்குள் அத்துமீறி பிரவேசித்து கடற்றொழிலில் ஈடுபட்ட போது கடந்த டிசெம்பர் மாதம் தமிழக மீனவர்கள் 9 பேரும் ஒரு படகுடன் நெடுந்தீவு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உத்தரகாண்ட் வெள்ளத்துக்கு பனிச்சரிவுதான் காரணமாம்

## இஸ்ரோ விஞ்ஞானிகள் விளக்கம்



உத்தரகாண்ட் மாநிலம் ஜமோலி மாவட்டத்தில் பனிப்பாறை சரிந்து விழுந்ததில் தவுலிகங்கை ஆற்றில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் 2 நீர்மின் நிலையங்கள் அடித்து செல்லப்பட்டன.

அப்போது அங்கு பணியில் இருந்த 200 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் வெள்ளத்தில் சிக்கிக் கொண்டனர். அவர்களையும் வெள்ளம் அடித்து சென்றுவிட்டது.

தவுலிகங்கை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள 2 ஆவது நீர்மின் நிலையத்தில் 2 சுரங்கங்கள் உள்ளன. திடீர் வெள்ளத்தில் சுரங்கம் முற்றிலும் மூழ்கியது. அதற்குள் ஏராளமான ஊழியர்கள் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வெளியேற முடியாமல் சிக்கிக் கொண்டனர்.

இதில் முதல் சுரங்கத்தில் சிக்கி இருந்த 16 பேரை மீட்பு குழுவினர் மீட்டனர். 2 ஆவது சுரங்கத்திற்குள் 34 பேர் சிக்கி இருக்கிறார்கள். அந்த சுரங்கப்பாதை 1.6 கி.மீற்றர் நீளம் கொண்டது.

அதற்குள் சேரு, சகதி, பாறைகள் என நிரம்பி உள்ளன. அவற்றை அகற்றும் பணி நடந்து வருகிறது. இந்திய திபெத்திய இராணுவப்படையினர், தேசிய மீட்புக்குழுவினர் என 500 பேர் அவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

சுரங்கப்பாதை பல வளைவுகளை கொண்டதாக இருக்கிறது. எனவே வாகனங்களை உள்ளே கொண்டு சென்று இடிபாடுகளை அகற்றுவது கடினமாக உள்ளது. எனவே சிறிய வகை இயந்திரங்கள் மூலமாக இடிபாடுகளை அகற்றி வருகிறார்கள்.

இன்னும் 130 மீற்றர் தூரத்திற்கு இடிபாடுகளை அகற்ற வேண்டி உள்ளது. அவ்வாறு அகற்றிவிட்டால் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்று கருதப்படுகிறது. அவர்கள் சிக்கியுள்ள பகுதியில் ஒக்சிஜன் அளவு கணிசமாக இருப்பதாக தெரிகிறது. எனவே அவர்கள் மூச்சுத்திணறி உயிரிழந்திருக்க வாய்ப்பு இல்லை என்று மீட்புக் குழுவினர் கூறினார்கள்.

இன்று அந்த இடத்தை சென்றடைந்துவிடலாம். தொழிலாளர்களை பத்திரமாக மீட்பதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கிறது என்றும் அவர்கள் கூறினார்கள்.

இதுவரை 26 பேர் உயிரிழந்துள்ளமை உறுதி செய்யப்பட்டது. அவர்களுடைய உடல்கள் மீட்கப்பட்டன. இன்னும் 197 பேரை காணவில்லை. அவர்களை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

விபத்து நடந்த பகுதியில் நிதி என்ற கணவாய் உள்ளது. அதையொட்டி 13 கிராமங்கள் உள்ளன. அந்த கணவாய் சாலை முற்றிலும் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் அந்த கிராமங்களில் வசிக்கும் மக்கள் வெளியே வர முடியாமல் தவிக்கிறார்கள். அவர்களுக்கு ஹெலிகொப்டர்கள் மூலம் உதவிகளை வழங்கி வருகின்றனர்.

பனிப்பாறை விழுந்ததற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்து இருந்தனர். பனிப்பாறைக்கு கீழே தண்ணீர் சரியாக உறையாமல் ஏரி உருவாகி இருக்க வேண்டும். இதன் காரணமாக பிடிமானம் இல்லாமல் பாறை உடைந்து விழுந்து இருக்கலாம் என்று சில விஞ்ஞானிகள் தெரிவித்து இருந்தனர்.

அந்த இடத்தில் பனிப் பாறை முற்றிலும் வெடித்து விழுந்து இருப்பதாக முதலில் கருதப்பட்டது. ஆனால் அவ்வாறு வெடிப்பு எதுவும் ஏற்படவில்லை என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறி இருக்கிறார்கள்.

சம்பவம் நடப்பதற்கு முன்பு அந்த பகுதியில் எடுக்கப்பட்ட பாறை படத்தையும், 7 ஆம் திகதி பனிப்பாறை விழுந்ததற்கு பிறகு எடுக்கப்பட்ட படத்தையும் ஒப்பிட்டு பார்த்து இந்த கருத்தை அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இஸ்ரோவின் தொலை உணர்வு ஆராய்ச்சி அமைப்பின் விஞ்ஞானிகள் செயற்கைக்கோள் படங்கள் மூலமாக ஆய்வுகளை மேற்கொண்டனர். அப்போது பனிப்பாறை சரிவு ஏற்பட்ட இடத்தில் வெடிப்பு ஏற்படுவதற்கான எந்த அடையாளமும் தெரியவில்லை.

எனவே அந்த இடத்தில் ஏரி அமைந்திருந்து அதன் மூலமாக பாறை வெடித்து விழவில்லை. பெரிய அளவில் பனிச்சரிவு ஏற்பட்டு இருக்கிறது. இதனால்தான் திடீர் வெள்ளம் ஏற்பட்டது என்று விஞ்ஞானிகள் கூறி உள்ளனர்.

பனிச்சரிவு ஏற்பட்ட இடம் கடல் மட்டத்திற்கு மேல் 5,600 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. சுமார் 14 கி.மீற்றர் சுற்றளவுக்கு பனிச்சரிவு ஒரே நேரத்தில் ஏற்பட்டு இருக்கிறது. இதன் மூலம் 3 கோடி கியூபிக் மீட்டர் தண்ணீர் ஒரே நேரத்தில் வெளியேறி இருக்கிறது. இதனால் இவ்வளவு பெரிய வெள்ளம் ஏற்பட்டுவிட்டது என்று விஞ்ஞானிகள் தெரிவித்து உள்ளனர்.

# அரசுடன் பேச நாங்கள் தயார் விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

3 விவசாயச் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள் டெல்லியில் தொடர் முற்றுகை போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று பேசிய பிரதமர் மோடி விவசாயிகள் பேச்சுக்கு வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

இது தொடர்பாக விவசாய சங்க தலைவர்களில் ஒருவரான ஷிவ்குமார் கூறியதாவது:–

மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதற்கு எப்போதுமே நாங்கள் மறுத்தது இல்லை. அரசு எப்போது எல்லாம் எங்களை பேச்சுக்கு அழைத்து இருக்கிறதோ அப்போதெல்லாம் அவர்களுடன் நாங்கள் பேசி இருக்கிறோம்.

பிரதமர் இப்போது அழைப்பு விடுத்திருக்கிறார். நாங்கள் பேச்சுக்கு எப்போதும் தயாராகவே இருக்கிறோம். அதே நேரத்தில் நேற்று பிரதமர் பேசும்போது விவசாயிகளை அவமதிக்கும் வகையில் கருத்துக்களை கூறி இருக்கிறார்.

போராடுவதையே எப்போதும் தொழிலாக கொண்டு இருக்கிறார்கள் என்று கொச்சைப்படுத்தும் வகையில் அவர் எங்களை குறிப்பிட்டு இருக்கிறார்.

ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியதால் தான் நமக்கு சுதந்திரம் கிடைத்தது. பாரதிய ஜனதாவோ அல்லது கட்சியின் முன்னாள் தலைவர்களோ ஆங்கிலேயர்களை எதிர்த்து போராடியது இல்லை.

அவர்கள் எப்போதுமே பொது மக்களின் இயக்கங்களுக்கு எதிராகவே இருக்கிறார்கள். ஜனநாயகத்தில் போராட்டம் என்பது முக்கியமானது. அரசு தவறான கொள்கை முடிவுகள் எடுத்தால் அதை எதிர்த்து போராட எங்களுக்கு உரிமை இருக்கிறது.

விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதார விலை தொடரும் என்று பிரதமர் கூறி இருக்கிறார். இதையே பலமுறை கூறி விட்டார்கள். அப்படியே தொடரும் என்று கூறினால் ஏன் அதற்கு சட்டம் இயற்றி உத்தரவாதம் அளிக்கக்கூடாது?

3 சட்டங்களையும் நீக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய ஒரே கோரிக்கை. அதை விட்டுவிட்டு மற்றவை பற்றி கூறுவதால் எந்த பயனும் இல்லை. எங்கள் போராட்டத்தில் பிரிவினை வாதிகள் யாரும் பங்கேற்கவில்லை. அவர்களுடைய தூண்டுதலுக்கும் இடம் அளிக்கவில்லை.

அதே போல அரசியல் சதி எதுவும் இதில் இல்லை. அரசியல் கட்சி தலைவர்கள் யாரும் இந்த போராட்டத்தில் பங்கேற்கவில்லை. அவர்கள் எங்களை சந்தித்து தார்மீக ஆதரவு அளிக்கிறார்களே தவிர வேறு செயல்கள் எதையும் செய்யவில்லை. நாங்களாக எங்கள் உரிமைக்காக போராடுகிறோம். அதை கொச்சைப்படுத்த வேண்டாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மற்றொரு தலைவர் ராகேஷ் திகாயத் கூறும் போது, பிரதமர் நாடாளுமன்றத்தில் நேற்று என்ன கூறினாரோ அதே உத்தரவாதத்தை ஏற்கனவே மத்திய அரசு தரப்பில் இருந்து எங்களிடம் சொல்லி விட்டார்கள். அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. எங்களுடைய வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையில் சட்டங்கள் உள்ளதால் அதை எதிர்க்கிறோம். கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு சாதகமாக சட்டத்தில் அம்சங்கள் உள்ளன.

நாங்கள் பட்டினி கிடந்து கார்ப்பரேட் நிறுவனங்கள் லாபம் சம்பாதிக்க விட்டு கொடுக்க முடியாது. இதற்காகதான் போராட்டத்தை நடத்துகிறோம் என்று கூறினார்.

# இந்தியா, ஆப்கானிஸ்தான் நாடுகள் பயங்கரவாதமற்ற சூழலையே விரும்புகின்றன

## மோடி பேச்சு



இந்தியா – ஆப்கானிஸ்தான் இடையிலான உச்சிமாநாடு இன்று காணொலி வாயிலாக நடைபெற்றது. இந்தியாவும், ஆப்கானிஸ்தானும் காபூலில் ஷாஹூத் அணை கட்டும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன. இரு நாடுகளின் வெளியுறவுத் துறை மந்திரிகளும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

உச்சிமாநாட்டில், ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானியுடன் பேசிய இந்திய பிரதமர் மோடி, இந்தியாவும், ஆப்கானிஸ்தானும், தங்கள் நாட்டுப் பகுதிகள் பயங்கரவாதத்திலிருந்து விடுபட விரும்புகின்றன என்று கூறினார். ஷாஹூத் அணை, காபூலுக்கு குடிநீர் வசதியை வழங்குவதுடன், நீர்ப்பாசன நோக்கத்திற்காகவும் பயன்படுத்தப்படும் என்றார்.

மேலும் ஆப்கானிஸ்தானில் அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து பிரதமர் மோடி கவலை தெரிவித்ததோடு, நாட்டில் ஒரு விரிவான போர் நிறுத்தத்தை இந்தியா ஆதரிக்கிறது என்றும் கூறினார்.

இதுதொடர்பாக பேசிய ஆப்கானிஸ்தான் அதிபர் அஷ்ரப் கானி, ஷாஹூத் நீர்த்தேக்கம் மூலம், பாபரின் கற்பனையை கவர்ந்த இயற்கை அழகை மீட்டெடுக்கும் எங்கள் பார்வையை செயற்படுத்த முடியும். தடுப்பூசி மருந்துகளை பரிசாக வழங்கியமையுடன், கூடுதலாக இந்த நீர் பரிசை வழங்கிய இந்தியா மற்றும் பிரதமர் மோடிக்கு நான் நன்றி கூறுகின்றேன் என்று தெரிவித்தார்.

# சுரங்கத்தில் சிக்கிய 35 பேரை மீட்க இடைவிடாமல் தீவிரப் பணி!



காண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத், சுரங்கத்தில் இருந்து மீட்கப்பட்டு ஜோஷிமத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 12 தொழிலாளர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் வெள்ளத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ள நிலையில், சுரங்கத்தில் சிக்கிய 35 பேரை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

நிலச்சரிவு காரணமாக இந்த வெள்ள பாதிப்பு ஏற்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

உத்தரகாண்ட் மாநிலம் சமோலி மாவட்டத்தில் உள்ள தபோவன் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

பனிப்பாறைகள் உடைந்த தன் காரணமாக இந்த வெள்ளம் ஏற்பட்டதாக முதல்கட்டமாக தகவல்கள் வெளியாகின. ஆனால் நிலச்சரிவு காரணமாக வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருக்கலாம் என்று புதிய தகவல் வெளியாகி உள்ளது.

இஸ்ரோவின் ஒரு அங்கமான ஐ.ஐ.ஆர்.எஸ். நிறுவனம் செயற்கைகோள் மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களைக் கொண்டு நடத்திய ஆய்வில், 5600 மீற்றர் உயரத்தில் பனிப்பாறையை சுற்றியுள்ள பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவால், 14 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் ரிஷிகங்காவின் கீழ்நிலைப் பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டு வெள்ளம் பெருக்கெடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் உத்தரகாண்ட் முதலமைச்சர் திரிவேந்திர சிங் ராவத், சுரங்கத்தில் இருந்து மீட்கப்பட்டு ஜோஷிமத் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் 12 தொழிலாளர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

பின்னர் பாதிக்கப்பட்ட இடங்களை ஹெலிக்கொப்டரில் சென்று அவர் ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய திரிவேந்திர சிங் ராவத், தபோவனத்திலுள்ள சுரங்கத்திற்குள் ஏறத்தாழ 35 தொழிலாளர்கள் வரை சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுவதால் இடைவிடாமல் மீட்பு பணி நடைபெற்று வருவதாக கூறினார்.

இந்தோ திபெத்தியன் எல்லை பொலிஸ், இராணுவம், தேசிய பேரிடர் மீட்பு படை, மாநில பேரிடர் மீட்பு படையினர் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் 2 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டமையால், பலியானவர்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளதாக குறிப்பிட்டார்.

# டெல்லி வன்முறையில் தேடப்பட்ட பஞ்சாப் நடிகர் தீப் சித்து கைது



டெல்லியில் டிராக்டர் பேரணியின் போது நிகழ்ந்த வன்முறை சம்பவம் தொடர்பான வழக்கில், தேடப்பட்டு வந்த பஞ்சாப் நடிகர் தீப் சித்து கைது செய்யப்பட்டார்.

பாதுகாப்பு படையினருடன் நிகழ்ந்த மோதல், செங்கோட்டையில் சீக்கிய மதக் கொடியை ஏற்றியது போன்ற சம்பவங்களில் தீப் சித்து இடம்பெற்றிருந்த வீடியோ மற்றும் புகைப்படங்கள் மூலம் உறுதிசெய்யப்பட்டது. தீப் சித்து உள்பட 8 பேர் குறித்து தகவல் அளிப்பவர்களுக்கு 6 லட்சம் ரூபா வெகுமதி அளிக்கப்படும் என்று டெல்லி காவல் துறை கடந்த வாரம் அறிவித்திருந்தது.

பஞ்சாப் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் தீப் சித்துவை பொலிஸார் தேடி வந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை இரவு அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# அறிவியலை அடிப்படையாக கொண்டவையாக ஒலிம்பிக் போட்டி முடிவுகள் இருக்கவேண்டும்

## அமெரிக்க அதிபர் ஜோ பைடன் கருத்து



ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளின் முடிவுகள் அனைத்தும் அறிவியலை அடிப்படையாக கொண்டு இருக்க வேண்டும் என்று அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

வானொலி நிகழ்ச்சி ஒன்றில் பேசிய பைடன், திட்டமிட்டபடி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் என்று நம்புவதாக கூறினார்.

போட்டியில் பங்கேற்பதற்காக வீரர்கள் அனைவரும் கடும் பயிற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நடைபெறுவதாக இருந்த ஒலிம்பிக் போட்டிகள் இந்த ஆண்டு டோக்கியோவில் ஜூலை 23 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 8 வரை நடைபெறவுள்ளது.

# அமெரிக்காவில் 24 மணி நேர கொரோனா தடுப்பூசி மையம் அதிபர் பைடன், துணை அதிபர் கமலா ஹாரீஸ் நேரில் பார்வை



அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா தடுப்பூசி மையத்தை அதிபர் ஜோ பைடன் மற்றும் துணை அதிபர் கமலா ஹாரிஸ் நேரில் பார்வையிட்டனர்.

அங்குள்ள State Farm மைதானத்தில் 24 மணி நேர கொரோனாத் தடுப்பூசி மையம் செயல்பட்டு வருகிறது.

அரிசோனா மாகாண சுகாதார இயக்குநர் Dr. Cara Christ அந்த மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனாத் தடுப்பு பணிகள் குறித்து இருவருக்கும் விளக்கி கூறினார்.

கடந்த மாதம் 12 ஆம் திகதியில் இருந்து இடைவிடாமல் இயங்கி வரும் இந்த மையத்தில் இது வரை சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனாத் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

# அர்ஜென்டினாவில் அதிபரை கண்டித்து ஏராளமானோர் அரசுக்கு எதிராக பேரணி



ஆர்ஜென்டினா நாட்டில் அதிபர் Alberto Fernandez க்கு எதிராக நடைபெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்.

தலைநகர் Buenos Aires அரசின் பொருளாதார சீர்குலைவு நடவடிக்கை களை கண்டித்து இந்த போராட்டம் நடைபெற்றது.

வறுமை மற்றும் பணவீக்கம் என்பது தொற்று நோயாகும் என்ற முழக்கத்துடன் பேரணியில் பங்கேற்பதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா காரணமாக ஆர்ஜென்டினாவில் ஏராளமானோர் வேலைவாய்ப்பை இழந்து கடும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி உள்ளதாக புள்ளி விவர குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

# இஸ்ரேல் பிரதமருக்கு எதிரான ஊழல் வழக்கு ஜெருசலேம் நீதிமன்றத்தில் விசாரணை ஆரம்பம்



இஸ்ரேலில் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாஹுவுக்கு எதிரான ஊழல் விசாரணை நீதிமன்றத்தில் நடைபெற்றது.

நண்பர்களிடமிருந்து லட்சக்கணக்கான ரூபா மதிப்பிலான ஆடம்பரப் பொருள்களைப் பரிசாகப் பெற்றதாகவும், அந்த நாட்டு நாளிதழ்களில் தனக்கு சாதகமாக செய்திகளை பிரசுரிக்கச் செய்வதற்காக வர்த்தக உதவிகள் செய்ததாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, ஊழல், மோசடி மற்றும் நம்பிக்கை துரோகம் என 3 மிகப் பெரிய வழக்குகள் அவர் மீது பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகளை விசாரித்த ஜெருசலேம் நீதிமன்ற நீதிபதி இரு தரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்பு வழக்கு விசாரணையை ஒத்திவைக்க உத்தரவிட்டார்.

# ஜேர்மனியில் அகதிகள் கட்டடத்தில் தீ விபத்து: பலர் படுகாயங்களுடன் மருத்துவமனையில்!




ஜேர்மனி நாட்டின் பெர்லின் நகரில் அமைந்துள்ள அகதிகள் கட்டடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

இதுபற்றி தகவல் அறிந்த தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் சரிவர தெரியவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் இந்த சம்பவத்தில் காயம் அடைந்தவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கு 70இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் முகாமிட்டு மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தீயணைப்பு துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# செவ்வாய் கிரகத்தை இன்று அடைகிறது ஐக்கிய அரபு இராச்சியத்தின் விண்கலம்



ஐக்கிய அரபு இராச்சியம் (UAE), செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய அனுப்பிய எமிரேட்ஸ் மார்ஸ் மினின் ஹோப் ஆர்பிட்டர் இன்று செவ்வாய் கிரகத்தின் சுற்றுப் பாதையில் நுழையவுள்ளது.

சுற்றுப்பாதையில் சுற்றி வந்தபடி ஆய்வு செய்ய உள்ள இந்த ஆர்பிட்டர், செவ்வாயின் வளிமண்டலம் குறித்த தரவுகளை அனுப்புமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

செவ்வாய் கோளின் தினசரி மற்றும் பருவகால மாற்றங்களை தொடர்ந்து ஆராய்ந்து செவ்வாய் வளிமண்டலம் குறித்த முழுமையான தகவல்களை ஹோப் ஆர்பிட்டர் வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜூலையில் ஏவப்பட்ட இந்த திட்டத்திற்காக 200 மில்லியன் டொலர்களை ஐக்கிய அரபு ராச்சியம் (UAE) செலவிட்டுள்ளது.



# கடும் குளிரினால் உறைந்த ஏரி உற்சாகத்தில் சுற்றுலாப் பயணிகள்!

கிர்கிஸ்தானில் உறைந்து போன ஏரியின் மேல் மக்கள் உற்சாகமாக விளையாடும், மெய்சிலிர்க்கும் காட்சி வெளியாகியுள்ளது.

கடும் குளிரினால் உறைந்திருக்கும் இந்த ஏரியின் அழகான தோற்றத்தை இரசிக்க பல்வேறு பகுதிகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் வருகை தருகின்றனர்.

இதனையடுத்து, கண்ணாடி போல் வழுவழுப்பாக இருக்கும் ஏரியின் மேற்பரப்பில் சிறுவர்கள் முதல் வயதானவர்கள் வரை பனிச்சறுக்கு செய்து உற்சாகத்துடன் விளையாடி மகிழ்கின்றனர்.



# மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக பொதுமக்கள் 4 ஆவது நாளாக போராட்டம்

மியன்மாரில் இராணுவ ஆட்சிக்கு எதிராக யாங்கூன் நகரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் 4வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மியன்மாரில் இராணுவ ஆட்சியை எதிர்த்தும், ஆங் சாங் சூகியை விடுதலை செய்யக்கோரியும் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது. தங்களுக்கு இராணுவ ஆட்சி வேண்டாம், ஜனநாயக ஆட்சி தான் வேண்டும் என்ற பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டு பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இதனை கட்டுப்படுத்த இராணுவம் முயற்சி செய்து வரும் நிலையில் போராட்டத்தில் ஈடுபடும் மக்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து கலைத்து வருகின்றனர். மியன்மாரில் தொடர்ந்து நடைபெற்று வரும் போராட்டத்தால் மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

# அரசியல் பழிவாங்கல், ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்; ஆணைக்குழு அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்குக!

## இருநாள்கள் விவாதத்துக்கும் எதிர்க்கட்சிகள் கோருகின்றன!

அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையையும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையையும் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கக்கோரி கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளமையுடன் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீது இரண்டு நாள்கள் விவாதமும் கேட்டுள்ளனர்.

எனினும் அரசாங்கம் அதற்கு இணக்கம் தெரிவிக்கவில்லை என சந்திப்பில் கலந்துகொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை கூடியது. நாடாளுமன்ற விவாதங்களை தீர்மானிக்க நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய கூட்டம் நேற்றுக் காலை நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் கூடியது.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளவையாவன -

தொழில் அமைச்சால் கடந்த ஜனவரி மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் இன்றைய தினம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நாளை 10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் 10.30 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்குப் பிரதமர் பதில் வழங்குவார்.

அதன் பின்னர் முற்பகல் 10.30 மணி முதல் முற்பகல் 11 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்மூல விடைக்கான கேள்விநேரம் வழங்கப்படும்.

அன்றையதினம் இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருப்பதுடன், இந்த விவாதம் முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 4.30 மணி வரை இடம்பெறும்.

அதன் பின்னர் எதிர்க்கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும்.

பெப்ரவரி 11 ஆம் திகதி வியாழக்கிழமை ஏற்றுமதி இறக்குமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழான மூன்று ஒழுங்குவிதிகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றமையுடன், அன்றையதினம் முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாய்மூல விடைக்கான கேள்விக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிற்பகல் 4.30 மணி முதல் 5.30 மணிவரை ஆளும் கட்சியால் முன்வைக்கப்படும் சபை ஒத்திவைப்புப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். அத்துடன், பெப்ரவரி 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மறைந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரங்கனி எல்லாவல, கே.பி.சில்வா மற்றும் கபில அபேரத்ன ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெறும். அன்றையதினம் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழுவின் அறிக்கையை நாடாளுமன்றத்தில் முன்வைக்குமாறும், ஆணைக்குழுவின் அறிக்கை மீது இரண்டு நாள்கள் விவாதம் நடத்த சபை இணங்க வேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

அதேபோல் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ள நிலையில் அந்த அறிக்கையையும் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனினும் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையையும், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையையும் சபைப்படுத்துவது பற்றி ஆளும் கட்சி எந்தவித தெளிவான பதிலையும் கட்சி தலைவர்கள் கூட்டத்தில் முன்வைக்கவில்லை.

அதேபோல் அரசியல் பழிவாங்கல் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தை நடத்துவதற்கும் அரசாங்கம் இணங்கவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக தெரிவித்தார்.

# பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு மூடப்படாது புதிய தவிசாளர் ஜனக ரத்நாயக்க உத்தரவாதம்!

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு கடந்த பத்து ஆண்டுகளில் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை செய்துள்ளது.

இத்தகைய ஆணைக்குழு மூடப்படாது. ஆணைக்குழுவை மூடுவது தொடர்பாக வெளிவந்த கருத்துக்கள் அனைத்தும் தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை என்று இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய தவிசாளர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை பதவியேற்று கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

மின்சார நுகர்வோருக்கு சிறந்த சேவையை வழங்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டில் மின்சார தொழில், நீர் சேவை தொழில் மற்றும் பெற்றோலிய துறை ஆகிய துறைகளில் சேவை தரம் மற்றும் நுகர்வோர் உரிமை பாதுகாப்பு என்ற அடிப்படையில் மொத்தமாக 111 செயல் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. - என்றார்.

# களுத்துறை சிறைச்சாலைக்குள் எட்டு பொதிகள் வீசப்பட்டன!

டிசெம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் களுத்துறை சிறைச்சாலையினுள் வீசப்பட்ட எட்டு பொதிகளை சிறைச்சாலை அதிகாரிகள் பல சந்தர்ப்பங்களில் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்த பொதிகளிலிருந்து 12 கையடக்கத் தொலைபேசிகள், 11 சிம் அட்டைகள், 90 புகையிலைகள், 281 பக்கெட் ஹெரோயின், 180 போதை மாத்திரைகள், 6 பக்கெட் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 2 பக்கெட் கஞ்சா ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமன்றி கையடக்கத் தொலைபேசியின் மின்னேற்றி, மின்கலம் மற்றும் லைட்டர்கள் என்பனவும் இவற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம் பொதியொன்றை சிறைச்சாலை வளாகத்திற்குள் வீசியெறிந்த சந்தர்ப்பத்தில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவரிடமிருந்து மோட்டார் சைக்கிளொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுமியை சீரழித்த சிறிய தந்தையார்!

யாழில் கொஉரம்

13 வயதுச் சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் அவரது சிறிய தந்தை மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரின் மனைவியான சிறுமியின் சிறிய தாய் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைக்கோட்டை பகுதியில் இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறுமியின் தாயார் முல்லைத்தீவில் வசிக்கிறார். மகளின் கல்விக்காக ஆனைக்கோட்டையில் வசிக்கும் தனது இளைய சகோதரியின் பாதுகாப்பில் மகளை விட்டுள்ளார்.

சிறிய தந்தையால் சிறுமி வன்புணர்வுக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸில் வழங்கப்பட்ட முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சிறுமியின் சிறிய தாயார் தனது கணவருக்கு எதிராக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இன்று (செவ்வாய்க்கிழமை) முறைப்பாடு வழங்கினார்.

அதனடிப்படையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமியை சட்ட மருத்துவ அதிகாரியின் முன்னிலையில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சந்தேக நபர் இன்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

# உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசி!

ஹேமந்த ஹேரத் தகவல்



உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமானோருக்கு வழங்கப்படவுள்ளதாக கூறப்பட்ட தடுப்பூசிகள் முதற்கட்டமாக இந்த மாதத்தின் நடுப்பகுதியில் கிடைக்கப்பெறும் என்று பிரதி பொது மக்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இலங்கையில் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று (திங்கட்கிழமை) இணையவழியூடாக நடைபெற்றது. இதன் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் -

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இலங்கையின் சனத்தொகையில் 20 சதவீதமானோருக்கு வழங்கப்படவுள்ளதாகக் கூறப்பட்ட தடுப்பூசிகள் முதற்கட்டமாக இந்த மாதத்தின் நடுப்பகுதியில் கிடைக்கப்பெறும்.

அடுத்த கட்டம் எதிர்வரும் காலங்களில் கிடைக்கும். அத்தோடு அரசாங்கத்தால் ஒரு கோடியே 80 லட்சம் தடுப்பூசிகளை கொள்வனவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவை கிடைப்பதற்கு கால தாமதம் ஏற்படும்.

நாட்டில் தகுதியான 4 ஆயிரம் தடுப்பூசி நிலையங்கள் இனங்காணப்பட்டுள்ளன. ஒரே சந்தர்ப்பத்தில் தடுப்பூசிகளை வழங்குவதற்காக 2 ஆயிரம் நிலையங்களைத் தயார்ப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

அதற்கமைய ஒரு நிலையத்தில் 300 என்ற வீதத்தில் நாளொன்றுக்கு 6 லட்சம் பேருக்கு தடுப்பூசிகளை வழங்கக்கூடியதாகவிருக்கும்.

இந்தியாவிலிருந்து கிடைத்துள்ள தடுப்பூசிகள் ஒரு லட்சத்து 60 ஆயிரத்திற்கும் அதிகமானோருக்கு வழங்கப்பட்டுள்ளது. தற்போது நாளொன்றுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் அளவு குறைவடைந்துள்ளது.

இதற்கான காரணம் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்டிருந்தவர்களுக்கு தடுப்பூசி வழங்கல் நிறைவடைந்துள்ளது. தற்போது அடுத்த கட்டத்தினருக்கு வழங்குவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. - என்றார்.


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
| --- | --- |
| பிறந்த திகதி - 1980.04.07 | பிறந்த திகதி - 1989.09.25 |
| மதம் - இந்து V | மதம் - இந்து V |
| நட்சத்திரம் - மூலம் | நட்சத்திரம் - ஆயிலியம் |
| செவ் - ----- | செவ் - ------ |
| பாவம் - 72 1/2 | பாவம் - 15 3/4 |
| கல்வி - A/L | கல்வி - Engineering |
| தொழில் - கனடா PR | தொழில் - ஆஸ்திரேலியா PR |
| எதிர்பார்ப்பு - கனடா வரவிரும்பும் பெண் | எதிர்பார்ப்பு - ஆஸ்திரேலியா வர விரும்புபவர். |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

குஞ்சர் கடையடி,
பருத்தித்துறை பிரதான வீதி,
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை

077 3434 415
077 8578 528


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.02.2021இல் வெளியிடப்பெற்றது.